மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: துணைப் பேரவைத் தலைவர் அவர்களே, நண்பர் திரு. சீமைச்சாமி அவர்கள் சொல்லும் படியான நிலைமை அங்கு இல்லை. வெள்ளம் வந்திருக்கும் நிலைமைதான் ஏற்பட்டது. கண்மாய்களில் எல்லாம் தண்ணீர் இல்லையென்பது நிலைமை. வெள்ளத்தடுப்புக்காக மணல் மூட்டைகள் எல்லாம் திருவாடனைத் தொகுதியில் போடப்பட்டிருப்பது கனம் அங்கத்தினருக்குத் தெரியும். அறுவடை கொஞ்சம் கால தாமதமாகிறது. வரி கட்டவில்லையென்பதற்காக யாருடைய உடைமையும் ஜப்தி எதுவும் செய்யவில்லை. நண்பர் கூறுகிற மாதிரியான அபாயகரமான நிலைமை இல்லை. அங்கு பொதுவான சிரமங்கள் ஏற்பட்டிருப்பது வெள்ளம் அதிகமாக வந்ததால்தான். இன்றுமாலை இராமநாதபுரம் கலெக்டர் அவர்களிடம் இருக்கும் நிலைமையைத் தெரிந்துகொண்டேன். நண்பர் கூறுகிற மாதிரி அபாயகரமானது அல்ல. ஆகவே, இது அவசர முக்கியத்துவம் வாய்ந்தது அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நான் ஏற்கெனவே ஒரு தீர்ப்பைக் கொடுத்துவிட்டிருக்கிறேன். அமைச்சர் அவர்கள் நிலைமையை விளக்குவதற்கு ஒரு வாய்ப்புக் கொடுத்தேன்.

திரு. நா. சௌந்தரபாண்டியன்: ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார். நான் 42-வது விதியின்கீழ் தீர்மானம் கொடுத்திருந்தேன். அதற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருந்தால், நன்றாக இருந்திருக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அமைச்சர் அவர்கள் கேட்டதால் இதற்கு வாய்ப்புக் கொடுத்தேன்.

(v) கோயம்புத்தூர் ஸ்பின்னிங் அண்டு வீவிங் மில்ஸ் கைமாற்றமும், தொழிலாளர் உரிமை பாதுகாப்பும்

திரு. எம். பூபதி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதி 42-ன் கீழ் பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகளை ஒற்றிவைத்து, கீழ்கண்ட அவசர முக்கியத்துவம் வாய்ந்த பொருள்பற்றி விவாதிக்க வேண்டும் என்பதற்காக முன்னறிவிக்கை கொடுத்திருக்கிறேன் :—

"கோவை நகரில் 2,000-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்யும் கோயம்புத்தூர் ஸ்பின்னிங் அண்டு வீவிங் மில்லை தற்சமயம் உள்ள உரிமையாளர் கைமாற்றம் செய்து தொழிலாளர்களின் உரிமைகளான மூடிய நாட்களின் சம்பளம், தறிகளை ஓட்டுவது, தொழிலாளர்களை நிரந்தரமாக்குதல் போன்ற பல உரிமைகளைப்பாதுகாக்கும் பல பொதுமுக்கியத்துவம் கொண்ட விஷயங்களை விவாதிக்க."

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இது அண்மையில் நடந்த நிகழ்ச்சி அல்ல. இது அன்றாட சாதாரண நிர்வாகத்திற்கு உட்பட்ட காரியமாகையால், இதற்காக பேரவையின் அலு

வல்களை ஒற்றிவைக்க வேண்டிய அவசியமில்லையென்று கூறி, அனுமதியை மறுக்கிறேன்.

(vi) **மதுரை கிராமப்புர, நகர்ப்புர காங்கிரஸ் அலுவலகங்கள் தாக்கப்பட்டதும், கடைகள், இல்லங்கள் இவற்றிற்கு ஏற்பட்ட சேதங்களும்**

THIRU N. S. V. CHITHAN : Sir, under rule 42 of the Madras Legislative Assembly Rules, I beg to give notice of a motion for adjournment of the business of the House to discuss a matter of urgent public importance, namely the attack on Madurai Urban District Congress Committee and the Rural District Congress Committee Office at Madurai recently and damages caused to the shops and residences on 17th February 1968 and arrests made on that day.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : போலீஸ் தங்களுடைய கடமையை நிறைவேற்றுகின்ற நிலையில் அவர்கள் நடவடிக்கை எடுத்திருப்பார்கள். இதற்காக பேரவையின் நிகழ்ச்சிகளை ஒற்றிவைப்பது முறையற்ற செயல் என்று கருதுகிறேன். இது அரசின் அன்றாட நிர்வாகத்திற்குட்பட்ட காரியமாகையால், இதற்கு அனுமதி மறுக்கிறேன்.

(vii) **கோயம்புத்தூரில் அவிநாசி சாலை ரயில் பாதைக் கடப்பு வழியில் மா சே துங்கின் ஒட்டுப்படங்கள் திடீர் தோற்றம்**

DR. H. V. HANDE : Hon. Deputy Speaker Sir, I have given notice of the following adjournment motion :

"That the business of this House stands adjourned to discuss a matter of urgent public importance namely the sudden appearance of Mao Tse Tung's posters for the first time in Coimbatore near Avinasi Road level crossing."

According to rule 50 (viii) and (x) the matter to be discussed must involve more than the administration of the law and the motion must refer to a mater in which the responsibility of the Government is clearly involved. I shall explain very briefly.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : போஸ்டர் ஒட்டுவது என்பது இந்தச் சர்க்காருடைய நிகழ்ச்சிக்கு எந்தவிதத்தில் தொடர்பு உடையது? அதற்கு சர்க்கார் பொறுப்பேற்றுக் கொள்ள முடியுமா? நிர்வாகத்துறையில் வேறு நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாமே தவிர, போஸ்டர் ஒட்டுவது ஒரு சாதாரண நிகழ்ச்சிதானே, அதைப்பற்றி விவாதிக்க எதற்காக இந்தச் சபை நிகழ்ச்சியை ஒத்திவைக்க வேண்டும்?

DR. H. V. HANDE : I want a chance to explain the exact position. The relationship between India and China is very strained. China has made aggression and we have lost several of our brothers in the recent war. To have posters of Chinese